முருகப்பெருமான் துணை

**மகான் சண்டேசுவர நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.02.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. தவசியே தருமம் வளர்த்திட
தணிகாசலன் சூட்சுமம் ஆகவே
அவதாரம் எடுத்த அரங்கனே
அண்ணலே உன்பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சால் திங்கள்
குறைவிலா முன்னான்கீர் திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 14ம் நாள் 26.02.2023, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு சண்டேசுவர நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்தருமம் வழங்கிக் காத்து
ஞானலோகம் படைக்க வந்த
ஞானி அரங்கன் வழிக்குவர
4. வருகவே வையகம் தன்னில்
வளர்ச்சி ஞான வழிகளாகி
தருமமும் பெருகி இனிதே
தரணியில் அற்புதம் நிகழும்
5. நிகழும் ஞானமும் தருமமும்
நீதியும் நிறைந்த மாற்றமாக
செகமெல்லாம் ஞானத்தலைமை
சித்திமிகு ஞானிகள் ஆசிபட நடந்தேறும்
6. தேறவே அவதாரம் எடுத்து
தேற்றம் தரும் ஞானியரின்
அறச்சேவைதனை உலகோர்
அவசியம் முழுசரணாகதிபட ஏற்று
7. ஏற்றுத் தொடர்ந்து வருதலுடன்
இணையிலாத் தொண்டாற்றி
ஆற்றல்பெருக தயவுநெறியே
அனைத்துமென உணர்ந்து ஏற்று
8. ஏற்று ஆன்மபலம் பெருக்க
எந்த வகையிலும் பேதமிலா
ஆற்றலாக மக்களிடை மாறி
அனைத்திலும் சமத்துவ நிலைகூடி
9. கூடியே உலகை மாற்றும்
குருவருள் குருபரன் அருளாக
நாடியே அன்பர்கள் அனைவருக்கும்
ஞானியாகும் சக்தியாக சித்திகிட்டி

10. கிட்டியே ஞானவான்கள் படை
குவலயம் எங்கிலும் பெருகிட
கட்டமான கலியிடர்கள் விலகி
கண்ணியமிக்கத் தலைமை உருவாகி

11. ஆகியே ஞானஆட்சி அமையும்
அமைதி பாதுகாப்பு நிறைந்த
அகிலமாக மாற்றம் காண்கும்
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–